# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.38/2023** **நாள் : 29.05.2023**

**கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் எடுத்துச் செல்லும் 800மிமீ விட்டமுள்ள பிரதான உந்துகுழாய் இணைப்புப் பணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) அயனாவரம்-குன்னூர் நெடுஞ்சாலையில் மேற்கொள்ளப்படுவதால் 31.05.2023 அன்று காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை மண்டலம்–4, 5 மற்றும் 6-க்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.**

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்

கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் எடுத்துச் செல்லும் 800மிமீ விட்டமுள்ள பிரதான உந்துகுழாய் இணைப்புப் பணிகள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) அயனாவரம்-குன்னூர் நெடுஞ்சாலையில் மேற்கொள்ளப்படுவதால் 31.05.2023 அன்று காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை மண்டலம்–4, 5 மற்றும் 6-க்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

| மண்டலம் | வார்டு | பகுதிகள் |
|---|---|---|
| மண்டலம்-4<br>(தண்டையார்பேட்டை) | 42, 43<br>48 | தண்டையார்பேட்டை(பகுதி)<br>பழைய வண்ணாரப்பேட்டை |
| மண்டலம்-5<br>(இராயபுரம்) | 49, 50, 51, 52, 53 | இராயபுரம் |
| மண்டலம்-6<br>(திரு.வி.க நகர்) | 73, 77<br>76 | புளியந்தோப்பு<br>பட்டாளம் |

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://chennaimetrowater.tn.gov.in/ என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்